جمعية علماء سريلانكا
සමස්ථ ලංකා ජම්ඉයියතුල් උලමා
அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா
ALL CEYLON JAMIYYATHUL ULAMA
(Incorporated by Act of Parliament No.:51 of 2000)
ඉස්ලාම් ආගමික විශාරදයින්ගේ සංගමය / இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள் சபை / COUNCIL OF MUSLIM THEOLOGIANS

## அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவில் அங்கத்தவராக இருப்பதற்குரிய ஒழுங்குகள்:

- ஜம்இய்யாவினால் அங்கீகரிக்கப்பட்ட அரபுக் கல்லூரி அல்லது ஜாமிஆவின் மௌலவி அல்லது ஆலிம் அல்லது அஷ்-ஷைக் சான்றிதழ் அல்லது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படும் அல்-ஆலிம் இறுதிப் பரீட்சையின் சான்றிதழ் வைத்திருக்கின்ற அல்லது ஜம்இய்யாவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் பல்கலைக்கழகமொன்றில் அரபு மொழி மூலம் இஸ்லாமிய சன்மார்க்கத்துறையில் பட்டம் பெற்ற சகல முஸ்லிம் இலங்கைப் பிரஜைகளும் ஜம்இய்யாவில் அங்கத்துவம் வகிக்கலாம்.
- இதில் அஹ்லுஸ் ஸுன்னத் வல்ஜமாஅத் கொள்கையுடையோரே அங்கத்துவம் பெறலாம் என்பதால் அஹ்மதிய்யாக்களின் அல்லது ஷீஆக்களின் கொள்கைகளைப் பின்பற்றுபவர்கள் அத்துவைதக் கொள்கையுடையோர் எவருக்கும் அங்கத்துவம் வழங்கப்பட மாட்டாது.
- பிழையான தகவல்களைக் கொடுத்து அங்கத்துவத்தைப் பெற்றுக் கொண்டவரது பிழை நிரூபிக்கப்படின் அவரது உறுப்புரிமை ரத்து செய்யப்படுவதுடன் அவர் வசிக்கும் பிராந்தியத்துக்கும் அது பற்றி அறிவிக்கப்படும்.
- ஜம்இய்யாவின் ஒவ்வோர் உறுப்பினரும் பின்வரும் காரணங்களொன்றினால் நீங்கினால் அல்லது நீக்கப்பட்டாலொழிய தொடர்ந்தும் அங்கத்தவராக செயற்படுவார்.
  - மரணம் சம்பவிக்கும் போது அல்லது
  - தனது இராஜினாமாவை எழுத்து மூலம் நிறைவேற்றுக் குழுவிற்கு அறிவித்து அது நிறைவேற்றுக் குழுவால் ஏற்றுக் கொள்ளப்படும் போது அல்லது
  - தவறான நடத்தை அல்லது ஊழல் அல்லது ஜம்இய்யாவின் நோக்கங்களை அடைவதற்கு தடையாகவிருத்தல் அல்லது அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்தின் கொள்கைக்கு முரணாக நடத்தல் காரணமாக அவரை நீக்க அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் நிறைவேற்றுக் குழுவால் போடப்பட்ட ஒழுக்காற்று குழுவினால் தீர்மானிக்கப்பட்டு அது அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் நிறைவேற்றுக் குழுவால் ஏற்றுக் கொள்ளப்படும் போது.
- அங்கத்துவம் பெற்றுக் கொண்ட ஒருவர் உடனடியாகச் செயற்படும் வகையில் பிராந்திய, மாவட்டக் கிளைகளின் உறுப்பினராக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.
- இலங்கைப் பிரஜையல்லாத ஆலிம் ஒருவர் இலங்கையில் வாழும் போது ஜம்இய்யாவின் அங்கத்துவம் கோரி விண்ணப்பித்தால், அதனைப் பரிசீலித்து பொருத்தமான முடிவை எடுக்கின்ற முழு அதிகாரமும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் நிறைவேற்றுக் குழுவுக்கே உள்ளது.
- அங்கத்துவத்தை ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரித்தல் தொடர்பில் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் தீர்மானமே இறுதியானதாகும்.

**அத்துடன் கீழே கூறப்பட்டிருக்கும் விடயங்களையும் வாசித்து புரிந்து ஆம்/ இல்லை என்று கேட்கப்பட்டிருக்கும் இடைவெளியில் தங்களது நிலைப்பாட்டையும் குறிக்குமாறு தாங்கள் வேண்டிக் கொள்ளப்படுகிறீர்கள்.**

1. நம்பிக்கை, செயற்பாடு ஆகியவற்றில் அல்குர்ஆன், அஸ்ஸுன்னா, அல்இஜ்மாஉ, அல்கியாஸுக்கேற்ப செயற்படும் அஹ்லுஸ் ஸுன்னத் வல்ஜமாஅத்தின் நிலைப்பாடே எனது நிலைப்பாடாகும்.

ஆம் ( )
இல்லை ( )

2. எல்லாம் அவனே என்ற கொள்கை, அல்ஹுலூல் வல்இத்திஹாத், அத்வைதக் கொள்கை போன்ற இஸ்லாத்திற்கு மாற்றமான ரித்தத்தை ஏற்படுத்தக்கூடிய அனைத்து கொள்கைகளையும் நான் முற்றாக நிராகரிக்கிறேன்.

ஆம் ( )
இல்லை ( )

3. அல்லாஹுதஆலாவின் இறுதி வேதமாகிய அல்குர்ஆன் இறக்கியருளப்பட்ட முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இறுதி நபி என்றும் இறுதித் தூதர் என்றும் அவர்களுக்குப் பின்னால் வேறு எந்த நபியும் வரமாட்டார்கள் என்றும் ஏற்றுக் கொள்கிறேன்.

ஆம் ( )
இல்லை ( )

4. இறுதித் தூதுத்துவத்தை மறுக்கும் காதியானிகள் மற்றும் அஹ்மதியாக்கள் காபிர்கள் என்று உறுதியாக நம்புகிறேன்.

ஆம் ( )
இல்லை ( )

5. நேர்வழி பெற்ற கலீபாக்களான அபூபக்ர், உமர், உஸ்மான், அலீ றழியல்லாஹு அன்ஹும், உம்முஹாத்துல் முஃமினீன்களில் ஒருவரான, அல்குர்ஆன் மூலமாக நிரபராதி என நிரூபிக்கப்பட்ட ஆயிஷா றழியல்லாஹு அன்ஹா மற்றும் ஏனைய உம்முஹாத்துல் முஃமினீன்கள், ஸஹாபாக்கள் அனைவரும் நீதமானவர்கள் என்ற அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஅத்தினரின் கொள்கையை நான் மனதார ஏற்று நம்பிக்கை கொண்டுள்ளேன்.

ஆம் ( )
இல்லை ( )

6. அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத் கொள்கைக்கு மாற்றமான ஷீஆ மற்றும் அதன் உட்பிரிவுகளில் ஒன்றாகிய இஸ்னா அஷரிய்யாக்கள் உட்பட அனைத்துப் பிரிவினர்களது அனைத்துக் கொள்கைகளையும் முற்றாக மறுக்கின்றேன்.

ஆம் ( )
இல்லை ( )

மேலே நான் கூறிய விடயங்கள் அனைத்தும் உண்மை என முழு மனதாக ஏற்றுக்கொள்கின்றேன் என்றும் நான் தற்பொழுது அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத்தின் கொள்கையுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றேன் என்றும் இதன் பிறகும் அதே கொள்கையுடன் வாழ்வேன் என்றும் உறுதியாகக் கூறுகின்றேன்.

அதற்கு மாற்றமாக கொள்கை ரீதியாகவோ செயல் ரீதியாகவோ என்னில் மாற்றங்கள் ஏற்பட்டால் அல்லது அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஅத்துக்கு முரண்பட்ட கொள்கையுடன் செயல்படுவது ஆதாரப் பூர்வமாக நிரூபிக்கப்பட்டால் எனது அங்கத்துவத்தை எதுவித முன்னறிவிப்புமின்றி இரத்து செய்வதற்கான சகல உரிமையும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவுக்கு உண்டு என்பதை ஏற்றுக் கொள்கின்றேன்.

மேலும், எனது தாய் நாடாகிய இலங்கையின் சட்டதிட்டங்களுக்கு அமைவாக நடப்பேன் என்றும், தீவிரவாதம் அல்லது பயங்கரவாதத்துடன் சம்பந்தப்பட்ட எவ்வித உள்நாட்டு, வெளிநாட்டு அமைப்புக்களுடனும் எத்தகைய தொடர்பும் எனக்கு இல்லை என்றும், இதற்குப் பின்னரும் தொடர்புகளை ஏற்படுத்தமாட்டேன் என்றும், இலங்கை நாட்டின் இறையாண்மைக்குப் பாதகமாகவோ அல்லது அச்சுறுத்தலாகவோ அமையும் வகையில் எச்செயலிலும் ஈடுபட மாட்டேன் என்றும் என்னில் நாட்டுக்குப் பாதமான ஏதாவது ஒரு செயல் நடைபெறுமிடத்து அதற்கு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா பொறுப்பாக மாட்டாது என்றும் உறுதியாக கூறிக் கொள்கின்றேன்.

ஆகவே, அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் அங்கத்தவராக என்னைச் சேர்த்துக் கொள்ளுமாறு வேண்டுவதோடு, எனது விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் பட்சத்து ஜம்இய்யாவின் சட்டதிட்டங்களுக்கு அமைய நடப்பதாகவும் உறுதியளிக்கின்றேன். அத்தோடு மேற்கூறப்பட்ட விடயங்களை வாசித்து நன்றாக புரிந்து கொண்டதன் பின்னரே இப்படிவத்தில் கையொப்பமிடுகிறேன்.

ஒப்பம்: ………………………………….. திகதி: ……………………………………………

பெயர்: ………………………………………………………………………………………………

தே.அ.அ.இல. ………………………………………………………………………………………

முகவரி: ……………………………………………………………………………………………